## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2013

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவகத்தின் திரவத்தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பிரதான வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,786,605 தொகையான மேலதிகப்பற்று காணப்பட்டதுடன், 2014 மார்ச் 31 ஆம் திகதி வரை இம்மேலதிகப்பற்று ரூபா 44,971,780 வரை அதிகரித்திருந்தது. அது கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள மேலதிகப்பற்று வசதியான ரூபா 40,000,000 தொகையான வரையரையையும் மிகைத்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது மூலதனச் செலவினத்திற்காக திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் எஞ்சியிருந்த ரூபா 40,000,000 தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்து மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், திறைசேரிக்கு அறிவிக்காமல் அப்பணத்தை வருமானச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 100,373,055 தொகையும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களாக ரூபா 258,900,100 தொகையும் இருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்புக்கள் ரூபா 59,969,349 தொகையும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களாக ரூபா 187,024,374 ஆக இருந்தன. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் திரவநிலை மட்டம் விரைவாக நாளுக்கு நாள் குறைவடைந்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுடன் இணங்காமை (இ.க.அ.நி)

கீழே காண்பிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | நியமங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 5 | (i) | நீண்டகாலமாக நலனொன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்த ரூபா 1,000,000 ஆன முதலீட்டை விற்பனை செய்வதற்காக உள்ள சொத்துக்களாக 2012 ஆம் ஆண்டின் போது இனங் காணப்பட்டிருந்த போதிலும் அதனை விற்பனை செய்வதற்கு அல்லது சந்தைப் பெறுமதியை கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | கைதவிர்ப்பதற்காக உள்ள சொத்துக்கள் நடைமுறையல்லாத சொத்துக்களிலிருந்து ஒதுக்கி விற்பனைக்காக இருக்கும் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 மற்றும் மீளாய்வாண்டிலும் முறையே ரூபா 314,086 தொகைக்கும் ரூபா 1,347,240 தொகைக்கும் |

கைதவிர்க்கப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி நடைமுறையல்லாத சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 8 | (i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகவுள்ள 06 பிராந்திய சேவைகள், 08 அலை வரிசைகள் மற்றும் புறம்பான செயற்திட்டமொன்றாக பராமரிக்கப்பட்டு வரும் டொய்ஸ்வெல் மறு ஒலிபரப்புக் கூடமொன்றாக காணப்படுவதுடன், அச்சேவைகள் மற்றும் அவற்றில் அறிக்கையிடப்பட வேண்டிய பகுதிகளுக்குரிய (segment) சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமான மூலங்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) ஏதாவது ஒரு அலகொன்று (சேவை நிலையமொன்றை) மூடப்படும் போது / இடைநிறுத்தும் போது அப்பிரிவின் வருமானம், செலவினம் வரிக்கு முன் இலாபம் / நட்டம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 யூன் 01 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த ஏக்கல ஒலிபரப்புக்கூடம் தொடர்பாகவும் கூட்டுத்தாபனத்தின் 02 ஒலிபரப்பு அலைவரிசைகள் இடைநிறுத்தப்பட்டு அந்த ஒலிபரப்புக் காலம் ரூபா 3.5 மில்லியனுக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 | நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் 12 மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த அட்டுறு செலவினங்களில் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 216,647,889 ஆன அட்டுறு செலவினங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வாறே பொறுப்புக்களின் காலம் மிகைத்துள்ள அல்லது உள்ளவாறான பொறுப்பொன்று இல்லாத செலவினம் பகுப்பாய்வு செய்யப்பட்டு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 7 | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன விலகல், வெளிநாட்டு நாணயமாற்று விலகல் நட்டம் மற்றும் மூலதன செலவினங்களுக்காக அரசிடமிருந்து கிடைத்த நன்கொடைகள் சரியாக சீராக்கப்படாமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடு, முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளுக்குரிய ரூபா 47,545,501 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய ரூபா 18,136,585 தொகைக்கு பதிலாக ரூபா 19,999,055 |

தொகை விரிவான வருமானக் கூற்றில் இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - 16

(i) நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வானது அவை பாவனைக்கு உகந்த நிலையை அடைந்த நிலையை அடைந்த தினத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் நிலையான சொத்துக்கள் இந்நியமத்திற்கமைய பெறுமானத்தேய்விடப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் பாவனையிலிருந்து நீக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்குரிய இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படாமல் விற்பனை மூலம் பெறப்பட்டிருந்த ரூபா 1,661,326 தொகை மாத்திரம் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - 17

குத்தகை முறைமை அடிப்படையின் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் சாதாரண பெறுமதி ரூபா 55,119,210 தொகையாக இருந்த போதிலும், அப்பெறுமதி நியமத்திற்கு முரணாக கணக்கீடு செய்த காரணத்தினால் முடிவுக் கணக்குகளில் ரூபா 52,963,457 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சாதாரண பெறுமதி ரூபா 2,155,753 ஆன தொகையால் குறைத்தும் பெறுமானத்தேய்வும் குறைத்தும் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - 18

(i) நியமத்தின் பிரகாரம் வருமானங்களை இனங்காண்பது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள நியதிகள் கருத்திற்கொள்ளப்படாமல் ஒலிபரப்பு கால விற்பனை வருமானம் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

- வருமான அளவை நம்பிக்கை ரீதியாக இனங்காண முடியுமாக இருத்தல்.
- கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பொருளாதார நலன்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைப்பது உறுதிப்படுத்தபட்டிருத்தல்.
- கொடுக்கல் வாங்கல்களில் அறிக்கையிடப்படக் கூடிய காலப்பகுதிக்குரிய பெறுமதி பூர்த்தி செய்யப்பட்ட பகுதியினை நம்பகத்தன்மையுடன் இனங்காணல்
- கொடுக்கல் வாங்கல்களுக்காக கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்வதற்காக செலவிடப்பட வேண்டிய கிரயத்தை நம்பிக்கைத்தன்மையுடன இனங்காணல்.

(ii) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் நீண்டகால வர்த்தக அறிவித்தல் பிரச்சாரங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளில்,

மீளாய்வாண்டினுள் ஒலிபரப்புச் செய்யப்பட்ட வர்த்தக விளம்பரங்களின் அளவினையும் எதிர்காலத்தில் ஒலிபரப்புவதற்கு உடன்பட்டுள்ள விளம்பரங்களின் அளவு என்பவற்றை வெவ்வோறாக காண்பிக்கக்கூடிய வகையில் இனங்காணப்பட்ட வருமானம் மற்றும் எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய விளம்பர பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - 21 | (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டுக் கடன்பட்டோர் ரூபா 64,306,207 தொகை ஐந்தொகை திகதியிலான நாணயமாற்று விகித அடிப்படையில் மாற்றப்படாதிருந்ததுடன், அதன் பிரகாரம் சாதகமான வெளிநாற்று நாணயமாற்று விலகல் ரூபா 71,730,837 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | 2 வெளிநாட்டு வர்த்தக முகவர் நிறுவனங்கள் ஊடாக இந்நாட்டில் ஒலிபரப்பாகும் இரண்டு விளம்பரங்களுக்காக வருமானம் கிடைக்க வேண்டிய திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் ஒலிபரப்புக் நேர விற்பனையாக கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான ஒலிபரப்பு நேர விற்பனை மற்றும் கடன்பட்டோர் ரூபா 297,533 தொகை வீதம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| | | (iii) | மீளாய்வாண்டின் வெளிநாட்டு ஒலிபரப்புக் காலத்தின் பெறுமதி 109,953,931 ஆக இருந்தது. எவ்வாறாயினும் இவ்வெளிநாட்டு ஒலிபரப்பு நேர விற்பனை மற்றும் அதற்கான பணப் பெறுவனவு என்பவற்றிற்கிடையே கால இடைவெளிக்குப் பதிலாக சாதகமான/பாதகமான நாணயமாற்று விலகல்களுக்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - 38 | | ஒலிபரப்பு சேவைகளுக்கான சுயமாக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2009, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,400,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அது அருவச் சொத்தின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக கணனி உதிரிப்பாகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. |

**2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

ஒலிபரப்பு நேர விற்பனை வருமானத்தைக் கணக்கீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கையொன்று கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விற்பனை பட்டியலை அடிப்படையாக கொண்டு விற்பனைப் பெறுமதி இனங்காண்பதற்குப் பதிலாக விளம்பர பட்டியலை அடிப்படையாகக் கொண்டு கணக்கு

வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் ஒலிபரப்பு நேர விற்பனை பட்டோலையை தயாரித்தலிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் காரணமாக மீளாய்வாண்டின் ஒலிபரப்பு நேர விற்பனை வருமானமான ரூபா 506,159,668 பெறுமதியின் செம்மைத்தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கை நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் செல்லும் முறைமைக்கு மாற்றப்படும் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமானத்தேய்வு கணிப்பீடானது சரியாகச் மேறகொள்ளப்படாமையால், மீளாய்வாண்டின் போது ஆரம்ப திரண்ட நட்டமானது ரூபா 366,906,074 தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு கணிப்பீடானது சரியாக கணிப்பீடு செய்யப்படாமையால் ஆண்டின் நட்டமானது ரூபா 23,084,581 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த நுவரெலியா ''நிவஹன'' விடுமுறைக் கேந்திரத்திற்காக கிடைக்க வேண்டிய மொத்த குத்தகை வாடகையில் ரூபா 2,350,000 தொகை கிடைக்க வேண்டிய குத்தகை வாடகைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணிப்பீட்டு வழுக்கள் காரணமாக ஒலிபரப்புக் கோபுரங்களை குத்தகைக்கு வழங்கியமையால் கிடைக்க வேண்டிய வருமானமானது ரூபா 495,000 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஊவா மாகாண சபைக்கு டிரான்ஸ்மீட்டரொன்றினை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் அறவிடப்பட வேண்டிய மின்கட்டணம் முறையே ரூபா 102,151 தொகையும் ரூபா 1,186,870 தொகையும் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) யட்டியன்தோட்டை ஒலிபரப்புக்கூடத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 1,621,820 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக அதில் ரூபா 1,070,505 தொகை வருமானச் செலவினமாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அத்தோடு இந்த ஒலிபரப்புக்கூடத்தின் கோபுரங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற குத்தகை வருமானமான ரூபா 300,000 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பளிக்கப்பட்டிருந்த இரண்டு வளவுகளுக்குரிய காணி மற்றும் கட்டிடங்களுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 23.5 மில்லியன் தொகை சரியாக கணக்குகளில் சீராக்கப்படாமை மீளாய்வாண்டிலும் சீராக்கப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிங்களின் பெறுமதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் கடன்பட்டோர் மீதி ரூபா 193,065,904 ஆக இருந்தது. எனினும் பூரணமற்ற

தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 184,201,372 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியில் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியில் பகுதியொன்று அதாவது ரூபா 3,986,654 தொகையைக் கழித்து ரூபா 180,214,718 ஆக கடன்பட்டோரின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. பேரேட்டின் பிரகாரம் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதியின் வேறுபாடு அதாவது ரூபா 12,851,186 ஆன அளவு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒலிபரப்பு நேர விற்பனை கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 21,679,514 தொகைக்கு பிழையாக இணக்கம் செய்யப்பட்டு ஒலிபரப்புக் கால கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,828,328 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) குத்தகை அடிப்படையில் கையேற்கப்பட்டிருந்த மோட்டார் வண்டியொன்று விபத்திற்குட்பட்டதன் பின்னர் பாவனையிலிருந்து அகற்றப்பட்டதால் முழுமையான காப்புறுதி உரித்தாக ரூபா 6,145,550 தொகை இழப்பீடாக 2012 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்தது. எவ்வாறெனினும் நீண்டகால குத்தகைக் கடன்தொகையை தீர்த்து உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போதும் நீண்டகால குத்தகை சொத்தொன்று இல்லாமல் செலுத்த வேண்டிய எஞ்சிய ரூபா 3,749,026 தொகையான தவணைக் கட்டணம் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஏக்கல ஒலிபரப்புக்கூடத்தின் ஒலிபரப்பு நடவடிக்கைகள் 2013 யூன் 01 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டு அங்கிருந்த நிலையான சொத்துக்களும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. எனினும் இந்த ஒலிபரப்புக்கூடத்தின் நிலையான சொத்துக்களை பேணுவதற்காக பராமரிக்கப்பட்டுவந்த ரூபா 9,996,710 தொகையான உதிரிப்பாகங்கள் பொருட் பதிவேட்டு பொருட்களாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஒ) ஒலிபரப்பு நேர விற்பனைகளுக்குரிய பெறுமதி சேர் வரி பெறுமதி கடன்பட்டோர் கணக்கிலிருந்து விடுபட்ட காரணத்தால் பெறுமதி சேர் அடிப்படையிலான வரி மற்றும் கடன்பட்டோர் கணக்கு என்பன ரூபா 14,099,433 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஓ) கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2008, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம், தயாரிப்புக் கட்டணம் மற்றும் முகவர் தரகு என்பன மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் தரகாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணத்தினால் மீளாய்வாண்டின் ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் மற்றும் தயாரிப்புக் கட்டணம் என்பன முறையே ரூபா 521,357 இனாலும் ரூபா 307,000 ஆலும் முகவர் தரகுச் செலவினம் ரூபா 762,644 ஆலும் அதிகரித்திருந்தது.

(ஔ) பிராந்திய சேவைகளுக்காக தலைமை அலுவலகத்தில் பேணப்பட்டு வரப்படும் நடைமுறைக் கணக்குகள் மூலமான விற்பனைகள் தலைமை அலுவலகத்தின் புத்தகங்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், விற்பனைகள் தொடர்பாக ஒவ்வொரு பிராந்திய சேவைகளில் காணப்படும் தலைமை அலுவலகத்துடன், நடைமுறைக் கணக்குகள் மற்றும் தலைமை அலுவலகத்தில் காணப்படும் பிராந்திய சேவைகளுடன் காணப்படும் நடைமுறைக் கணக்குகளுடன் ஒப்பிட்டு கணக்குகளில் செய்யப்பட வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,347,907 தொகையான செலவு

மீதியொன்றை ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதிகளை சீராக்குவதற்கு எவ்வித அடிப்படையொன்று இல்லாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுவெட்டு மீதியாக இருப்புப் புத்தகத்தின் மீதியே கொண்டு வரப்பட்டதாகவும் அது சரியானதல்ல எனவும் உள்ளகக் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக இருப்பு பெறுமதி ரூபா 1,510,498 நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) 1980 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மற்றும் 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் கூட்டுத்தாபனத்திற்கு இலவசமாக கையளிக்கப்பட்டிருந்த திருகோணமலை டொய்ஸ்வெல் மறு ஒலிபரப்புக் கூடத்தில் காணப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அம் மறு ஒலிபரப்புக் கூடத்திற்காக ஜேர்மன் அரசு சொத்துக்களை கொள்வனவு செய்த தினத்தில் காணப்பட்ட கிரயம் (யூரோ) பெறுமதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நாணயமாற்று விகித அடிப்படையில் ரூபாய் பெறுமதிக்கு மாற்றபட்டு சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,430,781,990 தொகை புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(கி) இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குரிய காணிப் பகுதியில் அமைந்துள்ள ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்புக் கூடத்தின் 0.3194 ஹெக்டேயர் அளவிலான காணிப் பகுதியொன்றுக்காகவும் காணிக்கு நுழையும் வீதிக்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 5,121,333 ஆன குத்தகைத் தொகை 2013 சனவரி 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டுமென அக்கூட்டுத்தாபனத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், செலுத்த வேண்டிய குத்தகைப் பொறுப்பு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏனைய வருமானத்தின் கீழ் திருகோணமலை டொய்ஸ்வெல் செயற்திட்டத்தின் ரூபா 10,369,767 தொகை நட்டமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு கணக்கீடு செய்யும் போது திருகோணமலை செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வான ரூபா 178,044,930 தொகை செயற்திட்டத்தின் செலவினமொன்றாக பதிவு செய்யாமல் கூட்டுத்தாபனத்தின் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருகோணமலை செயற்திட்டத்தின் நட்டம் ரூபா 188,414,697 ஆக இருந்தது.

(கு) திருகோணமலை டொய்ஸ்வெல் செயற்திட்டத்தின் தேறிய வருமானமாக ரூபா 58,000,063 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான ஒலிபரப்பு நேர வருமானமாக இருக்க வேண்டியது ரூபா 67,640,164 ஆகும். இங்கு மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 10,720,463 தொகை கடன்பட்டோர் மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2012 இற்காக மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,751,587 ஆன வருமானம் கணக்குகளில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(கூ) இதுவரையிலும் பொருத்தப்பட்டிராத ரூபா 25,687,683 பெறுமதியான இரண்டு ஒலிபரப்பு கோபுரங்களின் பாகங்கள் நடைமுறை வேலையாக கணக்கீடு

செய்வதற்குப் பதிலாக நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மூன்று கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு வழங்கப்பட்ட பட்டோலையில் காணப்படும் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 19,915,312 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 இருப்பு மீதிகளுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 144,299,204 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டிற்குரித்தாக வியாபாரப் பிரிவின் மூலம் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டிருந்த ஒலிபரப்பு நேர விற்பனைப் பெறுமதி மற்றும் கணக்குப் பிரிவின் மூலம் அதற்கிணைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த 2013 மார்ச் முதல் திசெம்பர் மாதம் வரையான ஒலிபரப்பு நேர விற்பனைப் பெறுமதி என்பவற்றிற்கிடையே ரூபா 111,799,389 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டமையால் அவ்வேறுபாடு கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 தொங்கல் கணக்குகள்

21 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இனங்காணப்பட்ட மோசடியின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 221,965 தொகையான காசுப் பற்றாக்குறை மற்றும் 2007 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட நிதி மோசடி என்பவற்றிக்குரிய ரூபா 281,110 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளில் கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு சொத்துக்களுக்கும் பொறுப்புகளுக்கும் உரிய அந்த சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு, உரிமை மற்றும் பெறுமதி என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் இன்மையின் காரணமாக அந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கு உருப்படி | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 871,694,474 | பொது 287 மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பொது 288 மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஊழியர் கடன் | 4,054,605 | ஒவ்வொரு உத்தியோகத்தரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய மீதிகளை உள்ளடக்கிய பட்டோலை |
| (இ) | மதிப்பிழந்த காசோலை | 2,468,535 | மதிப்பிழந்த காசோலைப் பதிவேடு/ விரிவான பட்டோலை |
| (ஈ) | பெறவேண்டிய வைப்புக்கள் | 440,475 | விரிவான பட்டோலை |
| (உ) | மரண அறிவித்தல் கடன்பட்டோர் | 7,997,854 | - மேற்படி - |
| (ஊ) | செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 9,793,729 | விரிவான பட்டோலை மற்றும் வைப்புப் பதிவேடு |
| (எ) | திருகோணமலை (டொய்ஸ்வெல்) மறு ஒலிபரப்புக்கூடத்தில் காணப்பட்ட சொத்துக்கள் | 2,081,220,512 | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஏ) | திருகோணமலை மறு ஒலிபரப்புக்கூடத்தின் தளபாடங்கள் | பெறுமதி கணக்கு களுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஐ) | திருகோணமலை மறு ஒலிபரப்புக் கூடத்தின் டிரான்ஸ்மீற்றர் அன்டனாக் களுக்காக காணப்படும் உதிரிப் பாகங்கள் (Spare Parts) | பெறுமதி கணக்கு களுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பொருட் பதிவேடு அல்லது பொறுப்பளித்தல் பதிவேடு மற்றும் பொறுப்பேற்கப்பட்ட பொருட்கள் தொடர்பான பெறுமதி மற்றும் பட்டோலைகள் |
| (ஒ) | நடைமுறை வேலைக்கான கொடுப்பனவுகள் | 10,000,000 | பட்டியல், பற்றுச்சீட்டுக்கள், எதிர்பார்க்கப்பட்ட வேலைத்திட்டம், செலவின மதிப்பீடு,கொடுப்பனவு அங்கீகாரத்திற்கான ஆவணங்கள் |
| (ஓ) | ஊழியர் முற்பணம் | 7,722,033 | விரிவான பட்டோலை மற்றும் இணக்கக் கூற்று |
| (ஔ) | பெறவேண்டிய வைப்புக்கள் (கடன்பட்டோர்) | 7,390,163 | வைப்பிற்கான பற்றுச்சீட்டுக்களும் பயன்படு ஆவணங்களும் |
| (க) | 32 கணக்கு இணக்க நாட்குறிப்புக்கள் தொடர்பானது | 188,340,318 | பயன்படு ஆவணங்களும் |
| (க்) | கடன்பட்டோர் | 23,475,516 | மீதிகளைஉறுதிப்படுத்தும் ஆவணங்கள் உள்ளடக்கப்பட்ட கோவை |
| (கா) | வெளிநாட்டு ஒலிபரப்புக் நேர விற்பனை | 17,841,807 | பட்டியல் |
| (கி) | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் காணப்படும் வியாபார மற்றும் | 12,807,802 | தொடர்புடைய கடித கோவைகள் மற்றும் பெறுமதி காணப்பட்ட முறை தொடர்பான காணப்படும் பட்டோலை |

ஏனைய பெறுவனவு மீதிகள்
(லக்ஹன்ட கிளைக் கணக்கு)

| | | | |
|---|---|---|---|
| (கீ) | உள்நாட்டு ஒலிபரப்புக் கால கடன்பட்டோர் மீதி | 71,427,287 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 71,427,287 பெறுமதியான உள்நாட்டு கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக 153 கடன்பட்டோருக்கு மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 872,693 பெறுமதியான 5 கடன்பட்டோர் மாத்திரம் மீதிகளை உறுதிப்படுத்தியிருந்தனர். ரூபா 186,100 தொகையான 04 கடன்பட்டோரால் கடன்மீதி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகை 3 மாதங்கள் தொடக்கம் 2 வருடங்களுக்கும் மேலான காலமாக வழங்குனரின் கையில் தக்கவைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் வழங்குனர் முற்பணக் கணக்கில் ரூபா 2,402,254 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டது.

(ஆ) வானொலி அலைவரிசை கோபுரங்களை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 100,000 வீதம் 14 பேரிடமிருந்து ரூபா 1,400,000 தொகையான வைப்புப் பணமானது உரிய குத்தகையாளரிடமிருந்து அறவிப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வைப்புக்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வானொலி நேர விற்பனை கடன்பட்டோர் மீதி ரூபா 184,201,372 ஆக இருந்ததுடன், அதில் வெளிநாட்டு கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை 64,306,207 ஆக இருந்ததுடன், அக்கடன் மீதியில் 90 சதவீதம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதிகளாக இருந்தது.

(ஈ) குறுகிய நேர ஒளிபரப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒலிபரப்புவதற்கு முன்னர் பணம் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் அக்கொள்கைக்கு முரணாக நிகழ்ச்சித்திட்டங்களை ஒலிபரப்பியமையால் குறுகியகால நிகழ்ச்சித்திட்டங்களை ஒலிபரப்பியமைக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,666,667 தொகை கடன்பட்டோராக குறிப்பிடப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் சாதாரண கடன் கால எல்லை 02 மாதங்களாக இருந்த போதிலும் மேற்குறித்த கடன் மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 295,075 தொகையான மீதியும் 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 5,827,281 தொகையான மீதியும் 01 இற்கும் 5 ற்கும் இடைப்பட்ட ரூபா 792,646 தொகையான மீதியும் காணப்பட்டன.

(உ) பெறவேண்டிய வைப்புத் தொகையாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 9,554,563 தொகையான மீதியில் ரூபா 1,002,426 தொகை 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 2,296,118 தொகை 20 வருடங்களுக்கும் 30 இற்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 3,336,574 தொகை 10 வருடங்களைவிட அதிகமான 20 வருடங்களைவிட குறைவான காலமாகவும் கிடைக்க வேண்டிய மீதியாக இருந்தது. அதன் பிரகாரம் கிடைக்க வேண்டிய வைப்புக்கள் பெறுமதியில் 69.4 சதவீதம் 10 வருடங்களை விஞ்சிய பெறவேண்டிய வைப்புக்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 13(2) ஆம் பிரிவு | 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக (வரித்தொகையுடன்) செலுத்த வேண்டிய ரூபா 3,593,520 தொகையான கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 155 | மீளாய்வாண்டிற்குரித்தாக வழங்கப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2015 பெப்ரவரி 11 ஆம் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 979,461 கூட்டுத்தொகையான 127 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆகஸ்ட் வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் மேற்குறித்த காசோலைகளில் ரூபா 340,712 தொகையான 48 காசோலைகள் அவ்வாறே காணப்பட்டன. |
| (iii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 20,000 எல்லையை மிகைத்து ரூபா 21,000 முதல் ரூபா 504,000 வரையான வீச்சில் 77 சந்தர்ப்பங்களில் ரூபா 4,625,682 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன. |
| (iv) நிதிப் பிரமாணம் 371(2)(இ) | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் ரூபா 1,588,831 தொகைக்குரிய செயற்பாடுகள் பூர்த்தியடைந்து 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்த 58 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| (v) | நிதிப் பிரமாணம் 371(5) | முற்பணத் தொகையைத் தீர்வு செய்யும் போது குறித்த நிதியாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ரூபா 2,187,768 தொகையில் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 101,730 தொகை தீர்க்கப்படாதிருந்தன. |
| (vi) | நிதிப் பிரமாணம் 754 மற்றும் நிதிப் பிரமாணம் 757(1) | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படும் திகதியிலும் இருப்பு புத்தகம் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 770 மற்றும் நிதிப் பிரமாணம் 773 | நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக சொத்துக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், உலோகப் பொருட்கள் அல்லது உலோக கலவைப் பொருட்கள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப் பிரமாணம் 1645(ஆ) | குறித்த மாதத்திற்கு பின் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் 268(அ) பொது மாதிரிப் பத்திரத்தில் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்களை கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | நிதிப் பிரமாணம் 1646 | பொது 267 நிர்ணயிக்கப்பட்ட மாதிரியில் சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (x) | நி.பி 1647(இ) | வாகனங்களை பழுதுபார்க்கும் போது அகற்றப்படுகின்ற உதிரிப்பாகங்கள் தொடர்பான அறிக்கை பேணப்படாதிருந்ததுடன் அவற்றை மீள களஞ்சியத்திற்கு கையளித்தல் தொடர்பாகவும் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 அந் திகதிய பீ.ஈ.டி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 4:2:2 ஆம் பந்தி | மாதாந்த காசுப் பாய்ச்சல் கூற்று, திரவ நிலைமை, கடன் எடுத்தல் தொடர்பான அறிக்கை என்பன தயரிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் (4) ஆம் பந்தி | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கைதவிர்க்கப்பட்ட ரூபா 1,661,326 ஆன பொருட்கள் தொடர்பாக அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதியளவில் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படக்கூடிய மற்றும் முடியாத பொருட்களை விற்பனை செய்யும் போது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,661,326 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த இரும்பு மற்றும் செப்பு உள்ளடக்கப்பட்ட டிரான்ஸ்மீற்றர் மற்றும் வாயுசீராக்கி உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள், தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்காக இந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளாமல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் 03 மூலதன செயற்திட்டங்களுக்காக ரூபா 21,356,467 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 09 வருடங்கள் மற்றும் 07 ஆண்டுகள் அளவிலான காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 2 வாகனங்கள் ரூபா 4,480,200 தொகை செலவு செய்யப்பட்டு ஓட்டநிலைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய திருத்தத்தின் 9.3.1(ஆ) பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் வாகன மொன்றிற்காக புதிதாக உடல்பகுதியொன்றை பொருத்தும் போது மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(ஈ) 2 மோட்டார் வாகனங்கள் ரூபா 4,480,200 தொகை செலவு செய்து பழுதுபார்ப்புக்களை மேற்கொண்ட போது செலுத்தக்கூடிய ஆகக்கூடிய முற்பணமான 20 சதவீதமான அளவை மிகைத்து ரூபா 2,240,100 தொகையான 50 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக முற்பணம் செலுத்துகையில் பாதுகாப்பு பிணையொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 140,508,406 வரிக்கு முன்னரான நட்டமாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 67,407,984 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 73,248,240 ஆன குறைவொன்றைக் காண்பித்தது. அரசாங்க மூலதன மானியங்களிலிருந்து கையேற்கப்பட்ட சொத்துக்களுக்காக ரூபா 253,393,366 தொகையான காலக்கழிவு மற்றும் வருமான செலவினத்திற்காக அரசிடமிருந்து கிடைத்த ரூபா 121,017,535 தொகை பங்களிப்பாக ரூபா 374,410,901 கூட்டுத்தொகை வருமானமாக இனங் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் நட்டம் இந்த அளவு வரை மட்டுப்படுத்தப்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 442,622,916 பெறுமதியில் மூலதன மானியங்களுக்குரிய காலக்கழிவு ரூபா 253,393,366 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் 74 சதவீதமாக இருந்தது. மேலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக கிடைத்த ரூபா 121,017,535 தொகையான அரசாங்கத்தின் மானியமும் செயற்பாட்டு வருமானத்தில் அடங்கியிருந்தது.

## 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப வீதம் 37 சதவீதத்திலிருந்து 31 சதவீதம் வரை 06 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேறிய இலாபம் 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) பிரதான வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து 2014 மார்ச் வரை தொடர்ந்தும் அதிகரித்து வரும் மேலதிகப்பற்று காணப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 2,825,348 தொகை செலுத்த நேர்ந்திருந்தது. இந்நிலைமை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 5719 சதவீத அதிகரிப்பொன்றாக அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) செயலாற்றல் அறிக்கை செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளின் போது செயலாற்றல் அறிக்கை, செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை அளவிடக்கூடிய முறையில் தயாரிக்கப்பட வேண்டுமென சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் அது சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலைவரிசைகளின் ஒலியலை நிலைமையை அதிகரிக்கும் நோக்கில் ரூபா 125,272,915 தொகை செலவு செய்து யட்டியன்தொட்ட ஒலிபரப்புக் கூடத்தின் ட்ரான்ஸ்மீட்டர்களின் பலத்தை 5 Kw இலிருந்து 10 Kw வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இவ்வாறான முதலீடொன்றை மேற்கொள்வதற்கு ஒலியலை நிலைமை பலவீனமாவதற்கான காரணங்கள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் பொறியியல்சார் ஆய்வொன்றும் முதலீட்டின் கிரயம் மற்றும் நலன்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையினால் மீளாய்வாண்டின் முதல் 07 மாதங்களில் (புதிய உபகரணங்கள் பொருத்தப்பட்டதன் பின்னர்) மின்சாரச் செலவினம் (புதிய உபகரணங்கள் பொருத்தப்பட்டதன் முன்னர்) முதல் 07 மாதங்களின் செலவினத்தை விட ரூபா 7,281,545 ஆல் அதாவது 682 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிவஹன ஒய்வு விடுதி 2005 ஒக்தோபர் மாதத்திலிருந்து 5 வருடங்களிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித குத்தகைத் தொகையையும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தாமல் 2014 பெப்ரவரி மாதம் வரையிலும் குத்தகையாளரால் பேணப்பட்டு சென்றிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 7,210,000 ஆன குத்தகை வாடகையை 2014 யூலை இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வாடகைத் தொகையை குறித்த தினத்தில் செலுத்தாமை மற்றும் உரித்தை பொறுப்பளிக்காமை போன்ற காரணங்களால் குத்தகை எடுத்தவருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் கூட்டுத்தாபனத்திற்கு ஆதனங்களின் உரித்து 2014 மார்ச் 01 ஆம் திகதி உரித்தாகியிருந்த போதும், வழக்கு நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 2,151,206 தொகையை 2014 யூலை 30 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் வானொலிச் சேவைகளை சுயமாக செயற்படுத்தும் நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 மே 14 ஆந் திகதி வரையிலும் அதற்காக ரூபா 3,400,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2014 யூலை மாதம் வரையிலும் இச்செயற்பாடு பூரணப்படுத்தப்படாமையால் அதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல நலன்களையும் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

(இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக அவசர கொள்வனவாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 15,402,724 மற்றும் ரூபா 7,748,046 பெறுமதியான கொள்வனவுகள் மின்னஞ்சல் ஒப்படைப்பு முறைமை மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் பொருட்கள் கிடைப்பதற்கு 02 மாதங்கள் முதல் 18 மாத காலம் கடந்திருந்தது. இதில் ரூபா 13,786,248 தொகையான 9 கொள்வனவுகள் ரூபா 950,000 ஐ விஞ்சிய கொள்வனவாக இருந்தன. கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த பொருட்கள் உரிய விதப்புரைகளுடன் பொருந்துகின்றதா என்பது தொடர்பாக சான்றிதழொன்று அல்லது அவ்வாறு பொருந்தவில்லையாயின் எடுக்கக்கூடிய நடைமுறைகள் தொடர்பாக இணக்கப்பாடொன்று இல்லாமல் பணத்தை செலுத்த நடடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதி பதவியணியின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதில் முறையான நடைமுறையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போது உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் அவ்வீடுகள் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முறையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பயன்படுத்தும் ஆவணங்கள் அல்லது அறிக்கை என்பன பேணப்பட்டிருக்கவில்லை. பதவியணியினர் உட்பட வெளித்தரப்பினருக்கு வசிப்பதற்காக வழங்கும் போது அதற்காக கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றிகாக மாதாந்த கட்டணங்கள் குடியிருந்தவர்களால் செலுத்தப்பட்டமைக்குரிய உறுதிப்படுத்தல்கள் எதுவும் காணப்படாமல்

இருந்ததுடன், உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருப்பவர்களிடமிருந்து அதற்காக மாதாந்த கட்டணங்களை அறவிடுவதும் இடம்பெற்றிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அன்டனா கோபுரங்கள் கொள்வனவு**

(அ) சாத்தியவள ஆய்வொன்று மற்றும் ஒப்பந்தக்காரரின் முன் தகைமை பரீட்சிக்காமல் புத்தூரில் அன்டனா கோபுரங்களை பொருத்தும் ஒப்பந்தம் 2011 யூன் 16 ஆம் திகதி இலங்கை கைப்பணிகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இக் கோபுரங்களுக்காக ரூபா 9,692,614 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், காணியில் காணப்பட்ட பொருத்தமற்றதன்மை அடிப்படையில் கோபுரங்களின் நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே வழங்கப்பட்டிருந்த முற்பணத்தொகையில் ரூபா 2,601,934 தொகை 2015 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கைப்பணிக் சபைக்கு இவ்வாறான பொறியியல்சார் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதென கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக 2013 நவம்பர் 27 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு சட்ட விதிக் கோவையின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் அமுலாகும் வகையில் கையொப்பமிடப்படுகின்ற தற்காலிக ஒப்பந்தத்தின் கீழ் பட்டியலப்படுத்தப்பட்ட அறிவித்தல்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அறவிடப்பட வேண்டிய முழுத்தொகையும் உத்தேச அறிவித்தல் ஒலிபரப்பப்படும் தினத்திற்கு ஆகக்குறைந்த 04 வேலை நாட்களுக்கு முன்னர் முழுமையாக செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 35,704,605 பெறுமதியான 439 பட்டியல்களைப் பரீட்சித்த போது ரூபா 31,986,444 பெறுமதியான 316 பட்டியல்கள் திசெம்பர் மாதத்திற்கு 01 மாதத்திற்கும் 5 மாத காலத்திற்கு முன்னர் ஒலிபரப்பப்பட்ட அறிவித்தல்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பட்டியல்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புக் கூடத்தின் பொலிஸ் ரேடியோ அன்டனாவொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன், அது 24 மணித்தியாலங்கள் பூராக செயற்படுவதாகவும் அதற்குத் தேவையான மின்சாரம் கூட்டுத்தாபனத்திற்குரிய மின்சுற்று ஊடாக வழங்கப்பட்டிருந்தது. அன்டனாவிற்கு செலவான மின் அலகுகளின் அளவு மதிப்பிடப்பட்டோ அல்லது கணிப்பிடப்பட்டோ அறவிடுவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹப்புத்தளை மற்றும் கந்துரட்ட சேவை ஒலிப்பரப்புக் கூடத்திற்காக ரூபா 588,968 தொகை செலவு செய்து மீளாய்வாண்டின் நவம்பரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 பீடர் கேபள்கள் தேவையான இயலளவை விட அதிக இயலளவைக் கொண்டிருந்தமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் 08

மாதங்களுக்கு அதிகமான காலம் கூட்டுத்தாபன வளவில் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹப்புத்தளை மற்றும் ஹுன்னஸ்கிரிய (கந்துரட்ட சேவை) ஒலிப்பரப்புக் கூடத்திற்கு பொருத்தும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு அன்டனா முறைமைகள் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் விலைக்கு வாங்கியமையால் தனியார் நிறுவனங்களுக்குரிய அன்டனா கோபுரங்களில் பொருத்துவதற்கு நேர்ந்திருந்தது. இதன் காரணமாக மாதாந்தம் ரூபா 63,498 தொகை வீதம் ஆண்டொன்றிற்கு ரூபா 761,976 தொகை மேலதிக கிரயமொன்றை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது.

(இ) திருகோணமலை மறு ஒலிபரப்பு நிலையத்தின் டிரான்ஸ்போமருக்கான உதிரிப்பாகங்கள் கொள்வனவை அவசர விலைக்கு கொள்வனவாக கேள்வி நடைமுறையிலிருந்து விலகி மேற்கொள்வதற்காக ரூபா 2,427,348 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அதாவது 1 1/2 வருடங்கள் செல்லும் வரை குறித்த பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறாமல் இருந்ததுடன், அச்செலவினம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வழியில் சரக்கின் கீழ் கர்ண்பிக்கப்பட்டிருந்தது.

**4.5 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

உள்நாட்டு முகவர் நிறுவனமொன்றினால் ரூபா 9,600,754 தொகைக்கு வழங்கப்பட்டிருந்த டிரான்ஸ்மீற்றர் மற்றும் அன்டனா விதந்துரைப்புகளுக்கு இணங்க சமர்ப்பிக்காமையால் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாதிருக்கையில் முழுக்கொடுப்பனவையும் மேற்கொண்டு செயலாற்றல் பிணைப் பொறுப்பினையும் விடுவிக்கப்பட்டிருந்தது.

**4.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

அநுராதபுர நகர எல்லையில் தாபிக்கப்பட்டிருந்த பணிப்பாளர் விடுதி பாதுகாப்பற்றதாகக் காணப்பட்டமையால் முழுமையாக அகற்றுவதற்கு நேர்ந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மேலும் 08 விடுதிகள் பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பில்லாமல் காணப்பட்டதுடன், இவ்வீடுகளின் பெறுமதி மற்றும் பயன்பாடு தொடர்பான விபரங்கள் இனங்காணக்கூடிய வகையில் புத்தகப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஓய்வுபெற்ற இரு ஊழியர்களுக்காக பணிக்கொடை குறைவாக செலுத்தப்பட்டிருந்தமையால் தொழில் திணைக்களத்தின் கட்டளையின் பேரில் மீளாய்வாண்டின் போது ரூபா 572,245 தொகையினை மிகை அறவீடாகச் செலுத்த நேர்ந்திருந்தது.

**4.8 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை நிறைவேற்று உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 13.21 மில்லியன் தொகையான மோசடியில் ரூபா 5.65 மில்லியன் தொகையை அறவிடுவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் வழக்கொன்று

தொடரப்பட்டிருந்தது. எனினும் கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாதிருந்தமையினால் எஞ்சிய ரூபா 7.56 மில்லியன் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது வெளிவாரி விளம்பர பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சேதமடைந்த மற்றும் காணாமல் போன 21 வகைக்குரிய 77 பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 101 மற்றும் 113 இன் பிரகாரம் தேவையான உபாய மார்க்கங்களை மேற்கொள்வதற்கு இவ்வறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யட்டியன்தோட்ட ஒலிபரப்புக் கூடத்திற்காக 10 Kw அளவிலான 07 டிரான்ஸ் மீற்றர்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த நிறுவனமொன்று ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியில் குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றாமையால் ரூபா 7,590,506 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. இத்தண்டப்பணத்தை அறவிடுவதற்குப் பதிலாக தேவைப்பாடொன்று இல்லாமலும் அமைச்சின் கொள்வனவு சபையின் அங்கீகாரமின்றி ரூபா 2,722,404 தொகையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 104,660 பெறுமதியான பொருட்கள் மாத்திரம் பெற்றுக்கொண்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 7,485,846 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக இருந்த வீரகெட்டிய ஒலிபரப்புக்கூடத்தின் 30 ஏக்கர் அளவிலான காணி மற்றும் மஹவ ஒலிபரப்புக் கூடத்தின் 68 ஏக்கர் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் அரசிற்கு பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அக்காணிகளின் தற்போதய சந்தைப் பெறுமதிக்காக நட்டஈட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இச்சொத்துக்கள் தற்போது காணப்படாமையால் அவற்றின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யட்டியன்தோட்ட ஒலிபரப்புக் கூடத்திற்காக உபகரணங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் ரூபா 92,310,965 ( €551,707) இற்கு 2011 திசெம்பர் 08 ஆம் திகதி முகவர் நிறுவனமொன்று மூலம் இரண்டு வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், 5 மாதங்களுக்குப் பின்னர் 2012 மே 10 ஆந் திகதியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 31 சதவீதம் அதாவது 28,399,669 (€175,522) ஆன பொருட்கள் 2012 ஆம் ஆண்டின் போதும் எஞ்சிய பொருட்கள் மீளாய்வாண்டின் போதும் கிடைக்கப்பெற்றிருந்தன. எவ்வாறாயினும் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 8.12.3 இன் பிரகாரம் வழங்கப்பட்ட பொருட்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட விதந்துரைப்புகளின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களென தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த உபகரணங்களுக்காக உற்பத்தி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 92,307,132 தொகையான முழுத்தொகையையும் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 5.4.10(இ) பிரிவிற்கு முரணாக நிறுத்தி வைத்தல் வரியொன்றில்லாமல் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பொருட்களுக்காக உத்தரவாதச் சான்றிதழொன்று உற்பத்திச் சான்றிதழொன்று மற்றும் கைநூல் என்பன வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்ட ரூபா 45,175,730 பெறுமதியான மைக்ரோ லிங்க் முறைமை உரிய முறையில் அமைக்கப்படாமையினால் உரிய முறையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையிலும் மறு ஒலிபரப்பு நிலையத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்புபடுத்தல்கள் 03 தனியார் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ரூபா 26,974,319 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இச்சேவையைப் பெறறுக்கொள்வதற்காக தற்போது ரூபா 400,000 வீதம் மாதாந்தம் செலுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இத்தொடர்புபடுத்தலும் அவ்வப்போது செயலற்றுப் போவதுடன், கூட்டுத்தாபனத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் முறைமையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது தற்போதைய முறைமையை (மைக்ரோ லிங்க்) திருத்தியமைத்து பயன்படுத்துவதற்கோ இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.10 தாமதமான செயற்திட்டங்கள்**

கொள்வனவு செய்த திகதி தொடக்கம் 16 நாட்களுக்குள் செயற்படுத்தக்கூடிய வகையில் ரூபா 5,837,775 தொகைக்கு கணனி கணக்கீட்டு முறைமைொன்று (Accounting Software) விலைக்கு வாங்குவதற்கு 2011 மே மாதத்தின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2012 செப்தம்பர் 24 ஆம் திகதி ரூபா 1,307,661 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2014 யூலை வரையிலும் இக் கணக்கீட்டு முறைமை தாபிக்கப்படாதிருந்ததுடன் பூர்த்தி செய்யப்பட்ட மென்பொருள் பகுதிக்காகவும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதிலும் ஒரே தடவையில் 05 கணனிகள் மாத்திரம் செயற்படுத்தக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2014 யூலை 30 ஆம் திகதி வரையிலும் அந்நிறுவனம் செயற்பாடற்றுக் காணப்படுவதாகவும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் போது மேலும் கண்டறியப்பட்டது.

**4.11 முறையாக பொறுப்பேற்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

நுவரெலிய மாவட்டத்தின் ஹாவாஎலிய கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய 01 ரூட் 20 பேர்ச் அளவிலான காணியில் அமைந்துள்ள நிவஹன விடுமுறைக் கட்டிடத்தின் உரித்தை மாத்திரம் ரூபா 250,000 தொகை செலுத்தி 1979 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்தது. 1987 சனவரி 08 ஆம் திகதி நுவரெலிய மேலதிக மாவட்ட செயலாளர் மற்றும் பிரதி காணிப் பதிவாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு ரூபா 6,000 வீதம் 1985,1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளுக்காக குத்தகைத் தொகையைச் செலுத்தி உரிய இடத்தின் குத்தகை உரித்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பணத்தை செலுத்தி காணியின் குத்தகை உரித்தை 2014 யூலை 30 ஆம் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.12 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏக்கல ஒலிபரப்புக்கூடம் அமைக்கப்பட்டிருந்த காணியில் 12 ஏக்கர் அளவிலான நிலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமற்ற பாரியளவிலான இயந்திர உபகரணங்கள்நிறுத்தி வைக்கப்பட்டிருநதன. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் நீர் மற்றும் மின்சாரம் வெளிநபர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பயன்படுத்துகின்ற வெளிநபர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்களால் பயன்படுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரத்திற்காக கூட்டுத்தாபனம் செலவிட்ட

பணத்தை கணிப்பீடு செய்து இனங்கண்டு அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலசினே நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்குத் தேவையான கட்டிட வசதிகள் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கைச்சாத்திடப்பட்ட இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. கட்டிட வாடகையாக எத்தகைய கட்டணமும் அறவிடப்படாதிருந்ததுடன் நீர் வழங்கலுக்காக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஒக்தோபர் வரையிலும் எந்தத் தொகையும் அந்நிறுவனத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.13 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்தம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையை தயாரித்து அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு அனுப்புமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்திருந்த போதும், 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை அமைச்சின் செயலாளருக்கு ஆட்சேர்ப்பு நடைமுறை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 13 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 528 ஊழியர் எண்ணிக்கை 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையில் 655 வரை அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்ளாமல் ஊழியர்களை சேர்த்துக் கொள்ளக்கூடாதென அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிக்கு முரணாக அங்கீகாரமில்லாமல் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 11 நிரந்தர ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் 79 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 68 பதவிகள் தற்போது பதவிகளை வகிப்பவர்களுக்கு மாத்திரம் உரித்தாகும் வகையில் பராமரிக்கப்பட வேண்டுமெனவும் அவ் உத்தியோகத்தர் இராஜினாமாச் செய்தமையால் அல்லது ஓய்வுபெற்றமையால் ஏற்படும் வெற்றிடம் மீள் நிரப்பப்படக் கூடாதெனவும் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும் அவ்வாறான 27 பதவிகள், கடமை மேவுகை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இவ் உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கு முரணாக 2013 பெப்ரவரி 18 ஆம் திகதி மற்றும் 2013 மார்ச் 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்றி விண்ணப்பங்களைக் கோரி 2004 யூலை 01 ஆம் திகதி பணிப்பாளர் (இசை) பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு பணிப்பாளர் பதவி அல்லாத இசைத்தட்டுகளை விற்பனை செய்யும் பிரிவு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் (இசை) பதவிக்காக விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்காத மற்றும் அப்பணிப்பாளர் பதவிக்கு தகைமை இல்லாத உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

(உ) பதில் கடமை புரிவதற்கும் வேலை மேவுகை செய்வதற்கும் நியமனம் செய்யும் போது தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.1.2 மற்றும் 13.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஏதேனும் பதவியொன்றுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு

நடைமுறையின் பிரகாரம் தகைமைகளை கொண்டிருக்க வேண்டிய போதிலும், அதற்கு புறம்பாக குறைந்த தகைமைகளாவது இல்லாத 12 உத்தியோகத்தர்கள் பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்டு சேவை தேவைப்பாடாகக் குறிப்பிடப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.1.2 மற்றும் 13.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமைப் பரிசோதனையொன்று இன்றி கடமை மேவுகை செய்வதற்கும் பதில் கடமை புரிவதற்கும் நியமிக்கப்பட்ட 59 உத்தியோகத்தர்களில் 58 பேர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். மேற்படி 59 பேரில் 21 உத்தியோகத்தர்கள் 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி 12 ஆம் இலக்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1.VII ஆம் பிரிவிற்கு முரணாக 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையான காலம் பதில் கடமை புரிவதற்கான ஆகக்கூடிய காலஎல்லையான 03 மாத காலத்தை மிகைத்து தொடர்ந்தும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(எ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணியின் 788 இற்காகவும் ஒப்பந்த அடிப்படையில் சேவையிலுள்ள 92 உத்தியோகத்தர்களுக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 336,576,904 தொகையும் உதவி பதவியணிக்கு ரூபா 34,126,399 தொகையும் சம்பளம் மற்றும் வேதனங்களாக செலுத்தப்பட்டிருந்தன. நிரந்தரப் பதவியணியில் மிகையாக இருக்கும் போது உதவி பதவியணியினரின் சேவை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையைப் பெற்றுக்கொண்டமை சிக்கலானதொன்றாக காணப்பட்டது.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் பிரதான பதவிநிலைத்தர பதவிகள் 03 அதாவது பிரதி பணிப்பாளர் நாயகம் (நிதி), பிரதி பணிப்பாளர் நாயகம் (பொறியியலாளர்), பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) போன்ற பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்காக 2012 யூலை 06 ஆம் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஐ) பணிப் பொறுப்பின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 15 மதியுரையாளர்களின் சேவைக்காலம் மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டு சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தன. அவர்களின் செயலாற்றல் பரிசீலனை செய்யப்படாமல் படியாக ரூபா 3,887,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு மதியுரையாளர்களின் சேவைக் காலத்தை நீடிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2012 சனவரி 20 ஆம் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பயிற்சி பெறுபவர்களின் காலம் 6 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன், அவர்களுக்கு ரூபா 500 படிகள் உரித்தாக இருக்க வேண்டிய போதிலும், பயிற்சி பெறும் 4 கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 375 தொகையான படிகளின் கீழ் 1½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஓ) உத்தியோகத்தர்களுக்காக தலைமை அலுவலகத்திலும் பிராந்திய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கடமை பொறுப்புக்களின் கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பரீட்சிக்கப்பட்ட தனிப்பட்ட கோவைகளின் பிரகாரம் கடமை பொறுப்பளிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2014 திசெம்பர் 08 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 - 2016 கூட்டிணைந்த திட்டத்திற்கு 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக தற்போது காணப்படுகின்ற வளங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

(ii) சுற்றுநிருபத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கு நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் உள்ளடக்கப்பட வேண்டும். 2013 ஒக்தோபர் மாதத்தின் போது புதிய பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை மாதத்தின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2012 - 2016 கூட்டிணைந்த திட்டத்திற்கு பதவியணியினர் விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடந்த மூன்று வருட செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக புலனாய்வொன்று உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அவ்விடயங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட பாதீடு என்பன நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 - 2016 கூட்டிணைந்த திட்டம் 2014 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வரையிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைக்கப்பெறாமல் இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையிலும் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் 4.2.2 இன் பிரகாரம் பணிப்பாளர் சபையால் கூட்டிணைந்த திட்டம் பாதீடு மற்றும் செயலாற்றல் என்பன நாளதுவரையாக ஆய்வு செய்யப்பட்டு உள்ளபடியான செயலாற்றல் திட்டமிடப்பட்ட செயல்முன்னேற்றத்துடன் வேறுபட்டுள்ளதா என பரிசீலனை செய்து அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீடு என்பன மாற்றப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயன் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட செயன்நடவடிக்கைத் திட்டம் 2012 - 2016 கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்ட கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் என்பன 05 பிரிவுகளுக்கே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5.4 உள்ளளக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரவினால் 2011 ஆம் ஆண்டிற்காக 20 கணக்காய்வு ஐயவினாக்களும் 2012 ஆம் ஆண்டிற்காக 25 கணக்காய்வு ஐயவினாக்களும் 2013 ஆம் ஆண்டிற்காக 30 கணக்காய்வு ஐயவினாக்களுமாக 75 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், முகாமையினால் 2014 ஆகஸ்ட் வரையிலும் அந்த ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 04 நிரந்தர கணக்காய்வு உதவியாளர்கள் இருந்த போதிலும், செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் பயிற்சி பெறும் 02 உத்தியோகத்தர்கள் வீதம் 4 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதனால் 2000 யூலை 19 ஆம் திகதிய 12/2000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு ஏதேனுமொரு பதவியொன்றை பொறுப்பளிக்க முடியாதிருந்தது. எனினும் இந்த உத்தியோகத்தர்கள் சிறாப்பரின் காசுப் பரிசோதனை, வருமான அனுமதிப்பத்திரத்திற்காக பணத்தைச் சேகரித்தல் போன்ற கடமைகளிலும் ஈடுபடுவதாக அவதானிக்கப்பட்டது.

## 5.5 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 பிரிவின் பிரகாரம் குழுவில் ஆகக் குறைந்தது நிறைவேற்றுனர் அல்லாத பணிப்பாளர் சபையின் மூன்று அங்கத்தவர்களை கொண்டிருக்க வேண்டிய போதிலும் அதற்குப் புறம்பாக பணிப்பொறுப்பு அடிப்படையில் கூட்டுத்தாபனத்தில் சேவையில் இருக்கின்ற பணிப்பாளர் ஒருவர் சமூகமளித்திருந்தார்.

## 5.6 வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2014 யூலை 31 ஆம் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தூரில் அன்டனா கோபுரங்கள் நிர்மாணிப்பதற்குரிய ரூபா 5,024,998 தொகை பிழையாக இலங்கை கைப்பணிக் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தமை, மீண்டும் அறவிடப்படாமை, கைப்பணிக் கைத்தொழில் சபைக்காக வெளி நபரொருவர் முன்னின்று மோசடி செய்தமை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை அவ்வாறே இச்செயற்திட்டத்தை கைவிட்டமையால் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 9.2 மில்லியன் தொகை நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டின் போது 60 மீற்றர் மற்றும் 100 மீற்றர் உயரமான 2 அன்டனா கோபுரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 23,119,683 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கோபுரத்தைப் பொருத்துவதற்காக தனியார் நிறுவனத்திற்கு முற்பணமாக ரூபா 2,568,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. பொருத்தப்பட வேண்டிய இடம் தீர்மானிக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக் கோபுரங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த முழுப் பெறுமதி 2010 ஆம் ஆண்டு வரை நடைமுறை வேலையாக கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் 2010 ஆம் ஆண்டின் போது சரியான அடிப்படையொன்று இல்லாமல் சொத்துக்கள் (Audio Frequency) கணக்கின் கீழ் கணக்கீடு செய்தமையும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 32 ஒப்பந்தங்களைச் செயற்படுத்தியிருந்த விற்பனை நிறைவேற்றுனரால் ரூபா 6,356,853 பெறுமதியான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டிருந்தும் ரூபா 945,000 தொகையான காசோலை மோசடிகளுக்காக மாத்திரம் பொலிசாரினால் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன், அறவிட வேண்டிய அம்மிகுதி தொகையையும் உள்ளடக்கி கூட்டுத்தாபனத்தினால் தற்போது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள விற்பனை நிறைவேற்றுனரினால் கையாளப்பட்ட 46 ஒப்பந்தங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,435,997 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்காக 2014 யூலை 24 ஆந் திகதி வரையிலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

ஒலிபரப்பில் கேட்டல் நிலைமை தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்குரிய பிரிவொன்று கூட்டுத்தாபனத்தினுள் தாபிக்கப்படாமல் இருந்ததுடன், இரசிகர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளைப் பதிவேடுகளில் உட்படுத்துதல் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முறைப்பாடுகளை செவிடுத்தல் ஆராய்ச்சி பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதிலும், இந்நிலைமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு நாளதுவரையாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணக் கொடுப்பனவு
(ஆ) சொத்துக் கட்டுப்பாடு
(இ) ஒலிபரப்புக் கால வருமானம் தொடர்பான கட்டுப்பாடு
(ஈ) கடன்பட்டோர்
(உ) பதவியணியினர் கட்டுப்பாடு
(ஊ) முகாமைத்துவ தகவல்கள்
(எ) கணக்கீடு
(ஏ) விளம்பர முகவர் நிறுவன வருமானக் கட்டுப்பாடு
(ஐ) கொள்வனவு
(ஒ) பாதீடு
(ஓ) செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்